கால்நடைகள் தாக்கி மரணம்.

*5279 திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட, வினாவுக்கு விடையளிப்பாரா :

விபத்தில் மரணமடைந்தால் மற்றவர்கள் சலுகை அடைவதுபோல், கால்நடைகள் தாக்கி விவசாயி மரணமடைந்தால், ரூ. 10,000 சலுகை பெற வழி உள்ளதா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் தொழிலாளர்கள் சிறு விவசாயிகள் மற்றும் குறு விவசாயிகள் (2.5 ஏக்கருக்கு குறைவாக நிலமுள்ளோர்) தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது இறந்து போனால் ரூ. 10,000 வழங்கப்படுவதுபோல், தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது கால்நடை தாக்கி இறக்கும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும் இச்சலுகை பொருந்தும்.

9-20 மணி.

திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தொழிலில் இருக்கும்போது கால்நடைகளால் விவசாயிகளுக்கு விபத்து ஏற்பட்டால் நஷ்டஈடு வழங்கப்படுவது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். கால்நடைகள் எப்போதுமே விவசாயிகளோடு இரண்டற கலந்து நிலைத்து நிற்கக் கூடியவை. ஆகவே, தொழிலில் இல்லாத போதும் கூட விபத்துக்கள் கால்நடைகளால் விவசாயிகளுக்கு ஏற்படுகின்றன. ஆகவே தொழிலில் இருக்கும்போதும், இல்லாத சமயத்திலும் இத்தகைய விபத்துக்கள் ஏற்பட்டால் அவர்களுக்கு இச்சலுகைகளை வழங்கி விவசாயிகள் பயன் அடைய ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது கால்நடைகள் தாக்கி இறக்கும் சிறு, குறு விவசாயிகளுக்கு இச்சலுகை பொருந்தும் என்று முதலிலேயே வினாவிற்கு விடை அளித்திருக்கிறேன்.

திரு. செ. நூர்முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, விபத்தில் மரணம் அடைகிற விவசாயிகளுக்கு அளிக்கப்படுகின்ற சலுகை பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். விபத்துக்கள் என்றால், கால்நடைகள் தாக்குவது பாம்பு கடியினால் இறப்பது என்று பலவகைகள் இருக்கின்றன. ஆகவே, எத்தகைய விபத்துக்கள் நேர்ந்தால் இப்படிப்பட்ட சலுகைகள் வழங்கப்படுகின்றன என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : எனது மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. நூர்முகமது அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு ஒரு நீண்ட பட்டியலே என்னிடத்தில் இருக்கிறது. சலவைத் தொழிலாளர்களில் தொடங்கி கிராமிய நடனம் ஆடும் கலைஞர் வரை 35 கேட்டகரீஸ் இருக்கின்றன. அவர்களுக்கு இப்படிப்பட்ட சலுகைகள் வழங்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சபையின் நேரத்தை வீண் அடிக்க வேண்டும் என்று விரும்பினால், நான் அந்த கேட்டகரி வொய்ஸ் லிஸ்டை படித்துக் காட்டுகிறேன்; (குறுக்கீடு) ஏற்கெனவே நான் இந்தச் சபையில் அதைப் படித்ததும் உண்டு. அதை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் நூர்முகமது அவர்கள் கேட்டு மறந்ததும் உண்டு.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் 35 கேட்டகரீஸ் இருப்பதாகச் சொன்னார்கள். நான் தெரிந்துக் கொள்ள விரும்புவது, வெளியிலே வயல்வெளிகளுக்குச் செல்லும் போதும், சாலையிலே செல்லும் போதும் கூட கழுதைகள் தாக்கி பல பேர் வாழ்க்கையே போய் விடுகிறது. எந்தவிதமான செயலும் இல்லாமல் போய் விடுகிறார்கள். ஆகவே, இந்தமாதிரி பாதிக்கப்பட்டவர்களுக்கு சலுகைகள் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : கழுதைகள் கவனிக்கப்படும். (சிரிப்பு)

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் விபத்துக்களில் சிக்கி மரணம் அடைய நேரிட்டால் அரசாங்கம் உதவி செய்கிறது. ஆனால் விபத்தில் இறந்ததற்குப் பிறகு, தாலுக்கா மருத்துவ மனைக்கு எடுத்து வந்து போஸ்ட்மார்ட்டம் செய்து வாங்கி வந்தால்தான் அவர்களுக்கு அந்த உதவி கிடைப்பதாக ஒரு விதி இருப்பதாக அறிகிறேன். இது மிகுந்த சிரமத்தை பொது மக்களுக்கு ஏற்படுத்துகிறது. அதை மாற்றி கிராமங்களில் இருக்கக்கூடிய பெரியவர்கள் அல்லது கிராமப் பிரமுகர்களிடம் இது போன்ற சர்ட்டிபிகேட் பெற்று இது போன்ற நட்ட ஈடு வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : நல்ல யோசனை, அரசு பரிசீலிக்கும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் பாம்பு கடித்து இறந்தால் அவர்களுக்கும் இந்தச் சலுகை அளிக்கப்படும் என்று அரசாங்கத்தின் சார்பாக அறிவிக்கப்பட்டது. சமீபத்தில் மயிலாதுறையில் பாம்பு கடித்து இறந்தவரை, போஸ்ட் மார்ட்ட

செய்த பிறகு, பாம்பு பிடிப்பவர்கள் பாம்பு கடித்து இறந்தால் தான் அந்தச் சலுகை வழங்கப்படும் என்று அச்சலுகையை அளிக்க மறுத்திருக்கிறார்கள். ஆகவே விவசாயிகளுக்கு விவசாய வேலைகளை அவர்கள் செய்துக் கொண்டிருக்கும்போது பாம்பு கடித்து இறந்தாலும் இந்தச் சலுகை வழங்கப்படும் என்று அரசு அறிவிக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

9.25 மணி

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : அது பற்றிய தகவல் என்னிடம் இல்லை; பாம்பை பிடிக்கும்போது அந்த பாம்பு கொத்தினால் பிடித்தவர் செத்தால் உதவி உண்டு. பாம்பு தானாகவே வந்து கடித்தால் அவர்களுக்கும் உதவி உண்டா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார். எந்த இடத்தில் பாம்பு தானாக வந்து கடித்தது என்பதை, அந்தத் தகவலை எனக்குத் தருவாரானால் அந்தப் பாம்பைக் கவனிக்க ஏற்பாடு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இலக்கணத்தில் தன் வினையா, பிற வினையா என்று முடிவு பண்ணினால்தான்.

சாணார்பட்டி ஒன்றியத்தை நத்தம் தாலுக்காவுடன் இணைத்தல்.

* 8794 திரு. மெ. ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நத்தம் தொகுதி, சானார்பட்டி ஒன்றியத்தை திண்டுக்கல் தாலுக்காவிலிருந்து நத்தம் தாலுக்காவுடன் இணைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே,

(அ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) சானார்பட்டி ஒன்றியப் பகுதியை திண்டுக்கல் தாலுக்காவில் இருந்து பிரித்து நத்தம் தாலுக்காவில் சேர்க்க ஒரு பரிந்துரை வந்துள்ளது. இது பற்றி மேலும் விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன, முடிவு 1991 ஆண்டுதான் எடுக்க இயலும்.